# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 251 | 4 Pages | 14.4.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 251 | 4 பக்கங்கள் | 14.4.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மாலத்தீவு செல்லும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை வெகுவாக குறைந்தது



மாலே, ஏப். 14

நமது அண்டை நாடான மாலத்தீவு சிறந்த சுற்றுலா தலமாக திகழ்ந்து வருகிறது. இயற்கை அழகு கொட்டிக்கிடக்கும் மாலத்தீவுக்கு உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் செல்வது வழக்கம்.

அதிலும் குறிப்பாக இந்தியாவில் இருந்து அதிகளவு சுற்றுலா பயணிகள் செல்வார்கள்.சுற்றுலா துறை மூலம் கிடைக்கும் வருமானத்தை நம்பி தான் அந்த நாடு உள்ளது.ஆனால் சமீபத்தில் மாலத்தீவு அதிபராக சீன ஆதரவாள ரான முகமது முஸ்சு பதவி ஏற்ற பிறகு இந்தியாவுடனான உறவில் விரிசல் ஏற்பட்டது.

மாலத்தீவில் இருந்து இந்திய ராணுவ வீரர்களை வெளியேற்றும் முயற்சியில் அவர் ஈடுபட்டார்.

மேலும் பிரதமர் மோடி கடந்த நவம்பர் மாதம் லட்சத்தீவு சென்றிருந்த போது அவரது பயணத்தை மாலத்தீவு மந்திரிகள் கேலி செய்து கருத்துக்களை பதிவிட்டனர். இது சர்ச்சையை ஏற்படுத்தியதால் 3 மந்திரிகள் சஸ்பெண்டு செய்யப்பட்டனர்.

இந்த பிரச்சினைக்கு பிறகு மாலத்தீவு செல்லும் இந்திய சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை வெகுவாக குறைந்தது. கடந்த ஆண்டு மாலத்தீவுக்கு மொத்தம் 17 லட்சம் சுற்றுலா பயணிகள் சென்றனர். இதில் 2 லட்சத்து 9 ஆயிரத்து 198 பேர் இந்தியர்கள் ஆவார்கள்.

அதற்கு அடுத்த இடத்தில் ரஷியா மற்றும் சீனர்கள் இருந்தனர். இந்த நிலையில் இந்தியர்கள் வருகை தற் போது குறைந்துள்ளதால் தற்போது 5 வது இடத் துக்கு சென்று விட்டது. இதனால் மாலத்தீவு அரசு கவலை அடைந்துள்ளது.

இதையடுத்து இந்திய சுற்றுலா பயணிகளை ஈர்க்க மாலத்தீவை சேர்ந்த சுற்றுலா அமைப்பு முடிவு செய்துள்ளது. இந்தியாவில் முக்கிய நகரங்களில் வாகனங்களில் ரோடு ஷோ நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாலத்தீவு சுற்றுலா குறித்த முக்கிய அம்சங்கள் மற்றும் பயணங்களை எளிதாக்கும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்டவைகள் இடம் பெறும் வகையில் இந்த ரோடு ஷோ நடத்தப்பட உள்ளது.

இது தொடர்பாக அவர்கள் மாலத்தீவு தலைநகர் மாலேவில் இந்திய அதிகாரி முனு மஹாவரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அப்போது அவர்கள் இந்தியர்கள் வருகையை அதிகரிக்க எடுக்கப்படும் முயற்சிக்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மலேசியா பெண்ணிடம் இருந்து அழகு ராணி பட்டம் பறிப்பு: சமூக வலை தளங்களில் வீடியோ வெளியானதால் சர்ச்சை



கோலாலம்பூர், ஏப். 14

அரைகுறை ஆடை அணிந்த ஆண் நண்பர்களுடன் நடனமாடிய மலேசிய பெண் தனது அழகு ராணி பட்டத்தை இழந்து உள்ளார். அவரது பெயர் விரு நிக்காஹ் டெரின்சிப் (வயது 24). இவர் சமீபத்தில் நடந்த மலேசிய அழகு ராணிக்கான போட்டியில் வெற்றி வாகை சூடி சிறந்த அழகி பட்டம் பெற்றார்.

இந்த நிலையில் இவர் தாய்லாந்து நாட்டுக்கு விடுமுறையில் சுற்றுலா சென்ற இடத்தில் ஆண் நண்பர்களுடன் நடனமாடினார். அவர்கள் முகம் சுழிக்கும்வகையில்அரைகுறைஆடைஅணிந்துஇருந்ததாககூறப்படுகிறது.

இது தொடர்பான சமூக வலை தளங்களில் வீடியோ வைரலானது. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. அழகிக்கு எதிராக சர்ச்சை கருத்துகளும் பதிவிடப்பட்டன. இதையடுத்து விரு நிக்காஹ் டெரின்சிப்பிடம் இருந்து மலேசிய அழகு ராணி பட்டத்தை திரும்ப பெறுவதாக நிகழ்ச்சி நடத்திய அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.


இது தொடர்பாக கடகாண்டு சுன் கலாச்சார சங்கத்தின் தலைவர் டான்ஸ்ரீ ஜோசப் பைரீன் கிட்டிங்கன் கூறும் போது விரு நிக்காஹ் சாதாரண பெண்ணாக இருந்தால் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் அழகு ராணி பட்டம் வென்றவர்.

நடன நிகழ்ச்சியால் அவருக்கு எதிர்ப்பு கிளம்பியதால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர் எங்கள் முடிவை ஏற்றுக்கொள்வார் என நம்புகிறோம்.

இது போன்ற தவறை மீண்டும் யாரும் செய்யாமல் இருக்க இது ஒரு எச்சரிக்கையாக இருக்கும் என்று நினைக்கிறேன் என்று கூறினார்.

இதனை ஏற்று விரு நிக்காஹ் டெரின்சிப் தான் வாங்கிய அழகு ராணி பட்டத்தை திருப்பி அனுப்பிவிட்டதாக தெரிவித்துள்ளார்.

## ரூ.1 லட்சம் கோடி நிதி மோசடி பெண் தொழிலதிபருக்கு மரண தண்டனை



வியட்நாம், ஏப். 14

வியட்நாம் நாட்டில் 12.5 பில்லியன் டாலர் நிதி மோசடி செய்ததாக 67 வயதான ரியல் எஸ்டேட் பெண் தொழிலதிபர் ட்ரூங் மை லான் 2022 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

12.5 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் கிட்டத்தட்ட 1 லட்சம் கோடி) என்பது வியட்நாம் நாட்டின் 2022 ஜிடிபியில் கிட்டத்தட்ட 3% ஆகும்.

2012 முதல் 2022 வரை சைகோன் ஜாயின்ட் ஸ்டாக் கமர்ஷியல் வங்கியை அவர் சட்டவிரோதமாக கட்டுப்படுத்தி, ஆயிரக்கணக்கான போலியான நிறுவனங்கள் மூலமாகவும், அரசு அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பதன் மூலமாகவும் இந்த நிதி மோசடியை அவர் செய்துள்ளார் என்று அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது

இந்த வழக்கை தெற்கு வியட்நாமில் உள்ள ஹோ சி மின் நகரில் உள்ள நீதிமன்றம் விசாரித்தது. இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்ட பெண் தொழிலதிபருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

வியட்நாமில் நடைபெற்று வரும் ஊழல் எதிர்ப்பு இயக்கம் தீவிரமடைந்த நிலையில் தான் பெண் தொழிலதிபர் ட்ரூங் மை லான் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டார். இவரின் கைதை அடுத்து அப்போது ஜனாதிபதி பதவியில் இருந்த வோ வான் துவாங் தனது பதவியை ராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஊழல்களால் வியட்நாமில் ரியல் எஸ்டேட் துறை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் மட்டும் 1,300 ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் அந்நாட்டின் சந்தையில் இருந்து விலகியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# இனிப்பு வாங்கி கொடுத்த ராகுல்காந்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி ‘ட்விட்’







சென்னை, ஏப். 14

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்காக கோவையில் ராகுல் காந்தி சாலையை கடந்து சென்று இனிப்பு வாங்கிய வீடியோ சமூக வலை தளங்களில் வைரலாகி வருகிறது.

கோவை செட்டிப்பாளையத்தில் இந்தியா கூட்டணி சார்பில் நடந்த பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி தமிழகம் வருகை புரிந்திருந்தார். முதலமைச்சர் ஸ்டாலினை சந்திப்பதற்கு முன்பாக கோவை சிங்காநல்லூர் காமராஜர் சாலையில் உள்ள ஓர் இனிப்பு கடையில் இருந்து முதலமைச்சருக்கு வழங்குவதற்காக மைசூர் பாக்னை காசு கொடுத்து வாங்கினார்.இந்த வீடியோ காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ எக்ஸ் பக்கத்தில் ராகுல் காந்தி இனிப்பை மு.க.ஸ்டாலினுக்கு பரிசாக வழங்கினார்என்ற கேப்சனுடன் பதிவிடப்பட்டிருந்தது. இதனை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவரது எக்ஸ் பக்கத்தில் “அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்!. என் சகோதரரின் செயலால் நான் நெகிழ்ச்சியடைந்தேன் என்று குறிப்பிட்டுள்ளார். ஜூன் 4 ஆம் தேதி இந்தியா அவருக்கு இனிப்பான வெற்றியைத் தரும்“ என்ற கேப்சனுடன் பகிர்ந்துள்ளார்.

## தென்காசி தேர்தல் களம் வெற்றியை நோக்கி திமுக முன்னாள் திமுக மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன் உதயநிதியை சந்தித்த பிறகு திமுக புதிய எழுச்சி



தென்காசி, ஏப். 14

கடந்த காலங்களில் தேர்தல் தேதி அறிவித்த பின் மந்தமான நிலையில் இருந்த திமுகவின் பணிகள் தற்பொழுது புதிய வேகம் எடுத்துள்ளது காரணம் அங்கங்கு சில உட் கட்சி பிரச்சனைகள் இருந்தபோதிலும் மாவட்டத்தின் ஆளுமை மிக்க மையமாக திகழ்ந்த முன்னாள் மாவட்ட செயலாளர் சிவ பத்ம நாதன் புதிய விஸ்வரூபம் எடுத்து கட்சிப் பணிகள் மற்றும் திண்ணை பிரச்சாரம் மூலம் தீவிர வாக்கு சேகரிப்பு, திமுக தொண்டர்களிடம் அவர் அணுகும் முறை வாக்கு சேகரிக்கும் முறை புதிய வேகத்தை உருவாக்கியுள்ளது

தென்காசி நகருக்கு பிரச்சாரத்துக்கு வந்த உதயநிதியை முன்னாள் மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன் சந்தித்த பின் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது மேலும் வேட்பாளர் ஸ்ரீ ராணி குமார் சிவ பத்மநாதனை சந்தித்து பொன்னாடை போர்த்தி வாழ்த்து பெற்றது திமுக தொண் டர்களிடம் மகிழ்ச்சியை பெற்றுள்ளது மேலும் அமைதியாக கட்சி பணியை செய்து வந்த முன்னாள் மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதனின் உற்சாகம் இப்பொழுது தொகுதியில் மிகவும் முக்கியமான பங்களிப்பாக உள்ளது இதன் காரணமாக மந்த நிலையில் இருந்த திமுகவின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது கடந்த காலங்களில் பொறுப்பு இல்லாவிட்டா லும் தனது கட்சி பணியை தொண்டர்களுடன் என்றும் போல் செய்து கொண்டிருந்த சிவ பத்மநாதனின் பணிகள் தற்பொழுது தென்காசி தொகுதிகளில் பேசப்படும் செய்தியாக மாறிவிட்டது இதனால் திமுகவின் வெற்றி வாய்ப்பு மிகவும் பிரகாசமாக உள்ளது ஒரு ஆளுமை மிக்க முன்னாள் மாவட்ட செயலாளர் அவர்களின் பணி தொகுதியில் . மாற்றம் ஏற்பட்டு உள்ளது. முன்னாள் மாவட்ட செயலாளரின் செயல்பாடு கட்சியின் அடிமட்ட தொண்டன் முதல் தலைவர்கள் வரை புன்சிரிப்புடன் அவர் செய்யும் பணிகள் இன்று திமுகவின் வெற்றிக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துவிட்டது எது எப்படியோ திமுகவின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு விட்டது இது பற்றி திமுகவின் மூத்த முன்னோடி கூறுகையில் சிவ பத்மநாதனை போன்று ஒருவர் தொண்டனாகவும் தலைவனாகவும் செயல் வீரனாகவும் காண்பது மிகவும் அரிது தென்காசி மாவட்டத்திற்கு கிடைத்த ஒரு சிறந்த ஆளுமை

## விழுப்புரம் மாவட்டத்தில் தி.மு.க.வுக்கு வாக்கு சேகரிப்பு



செஞ்சி, ஏப். 14

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க இளைஞர்களின் எழுச்சி நாயகன் சின்னவர் அமைச்சர் MKS உதயநிதிஸ்டாலின் விழுப்புரம் வடக்கு மாவட்ட ஆற்றல்மிகு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் செஞ்சி KS மஸ்தான் சிறுபான்மை நலத்துறை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் வழிகாட்டுதலோடும் திமுகழக மாநில பொதுக்குழு உறுப்பினர், விழுப்புரம் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் பூ.செல்வராஜ் M.Com.,B.ED., தலைமையில் மேல்மலையனூர் ஊராட்சி கிளை கழக செயலாளர் பூ.கணேசன் மற்றும் திமுகழக நிர்வாகிகள் அண்ணாமலை, இளங்கோ டைலர், பெருமாள், வெங்கடேசன், கபாளி மணி கண்டன், நவீன், ராமு, கணேசன் மற்றும் திமுகழக உடன்பி றப்புக்கள் வாக்குசாவடி முகவர்கள்: L.பிரகாஸ்,G நிர்மல்குமார், சிலம்பரசன் ,நந்தகுமார், அருண்பாண்டியன் மற்றும் திமுகழக உடன்பிறப்புக்கள் ஒன்றிணைந்து நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் ஆரணி நாடாளுமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் திரு MS.தரணிவேந்தன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வாக்குசேகரித்தனர்.

## ரம்ஜான் பண்டிகை விழா



மதுரை, ஏப். 14

மதுரை, வில்லாபுரம் யோக சிவா பள்ளியில், தமிழ்நாடு தவழும் மாற்றுத்திறனாளிகள்சங்கம்சார்பாகரம்ஜான் பண்டிகைவிழாமாநிலப்பொதுச்செயலாளர் ராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர்கள் ஷேக் மஸ்தான், நூருல்லா, துணை நடிகர் சுரேஷ், ஈஷா யோகா அறக்கட்டளை நிர்வாகிகள் ஆகியோர் 50 மாற்றுத்திறனாளிகளுக்கு புத்தாடைகள் வழங்கினர். ஏராளமான மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டனர். மகளீர் அணி செயலாளர் ராவியத் ஒருங்கிணைத்து நன்றி கூறினார்.




# சிவகங்கை மாவட்டத்தில் வாக்குச்சாவடி மையங்களில் பல்வேறு நிலைகளில் பணிகள்

சிவகங்கை, ஏப். 14

சிவகங்கை மாவட்டம், பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024 ஐ முன்னிட்டு, வாக்குச்சாவடி மையங்களில் பல்வேறு நிலைகளில் பணிகள் மேற்கொள்ளவுள்ள அலுவலர்களுக்கான நடைபெற்ற மூன்றாம் கட்ட பயிற்சி வகுப்பு மற்றும் அஞ்சல் வாக்குப் பதிவு செலுத்தும் பணி ஆகியன குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித், மற்றும் பொது தேர்தல் பார்வையாளர்எஸ். ஹரிஷ், ஆகியோர் மானா மதுரை மற்றும் சிவகங்கை ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட மையங்களில் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு பணிகள் குறித்து உரிய அறிவுரைகளை வழங்கி தெரிவிக்கையில்,

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி, தமிழகத்திற்கு ஒரே கட்டமாக வருகின்ற ஏப்ரல் 19ஆம் தேதி அன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் 31சிவகங்கை பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் மண்டல அளவிலான அலுவலர்கள், வாக்குச்சாவடி தலைமை அலுவலர், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஆகியோர், தங்களுக்கான பணிகளை மேற்கொள்வது குறித்து உரிய பயிற்சிகள் இரண்டு கட்டமாக முன்னதாகவே வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, இன்றைய தினம், வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான 3ம் கட்ட பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகிறது.

அதில், சிவகங்கை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு சிவகங்கையிலுள்ள மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரியிலும், காரைக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு காரைக்குடியிலுள்ள மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி மற்றும் இராமநாதன் செட்டியார் நகராட்சி உயர்நிலைப்பள்ளியிலும், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு திருப்பத்தூரிலுள்ள ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் கல்லூரியிலும் மற்றும் மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மானாமதுரையிலுள்ள அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் செவன்த்டே அட்வென்டிஸ்ட் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியிலும் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகிறது. இதில், வாக்குச் சாவடி தலைமை அலுவலர்கள், நிலை 1 வாக்குச்சாவடிஅலுவலர்களுக்கும், நிலை 2 வாக்குச் சாவடி அலுவலர்களுக்கும், நிலை 3 வாக்குச் சாவடி அலுவலர்களுக்கும், நிலை 4 வாக்குச் சாவடி அலுவலர்களுக்கும் என மொத்தம் 6,679 அலுவலர்களுக்கு சட்டமன்றத் தொகுதி நிலை பயிற்சி அலுவலர்கள் மற்றும் 120 மண்டல அலுவலர்களால் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. மேலும், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குவதை கண்காணிக்க ஒவ்வொரு பயிற்சி மையத்துக்கும் மாவட்ட நிலை அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

முந்தைய தேர்தல் காலங்களில் தங்களுக்கான பணியினை சிறப்பாக மேற்கொண்டதைப் போல், தற்போதும் நடைபெறவுள்ள சிவகங்கை பாராளுமன்ற தேர்தலிலும், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, சிறப்பான பணியினை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித்மற்றும் பொது தேர்தல் பார்வையாளர் எஸ்.ஹரிஷ், ஆகியோர் தெரிவித்தனர்.

# பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு மாற்றுத்திறனாளி வாக்காளர்களின் விழிப்புணர்வு வாகன பேரணி



அரியலூர், ஏப்.14

அரியலூர் மாவட்டம், சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி, 149 அரியலூர் சட்டமன்ற தொகுதி, திருமானூர் பேருந்து நிலையத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பாராளுமன்ற தேர்தலினை முன்னிட்டு 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வினை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடையே ஏற்படுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாகன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அரியலூர் மாவட்டத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 149 அரியலூர் சட்டமன்ற தொகுதி, திருமானூர் பேருந்து நிலையத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வினை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடையே ஏற்படுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாகன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணி திருமானூர் பேருந்து நிலையத்தில் தொடங்கி, திருமானூர் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் முடிவடைந்தது. மேலும் இந்த விழிப்புணர்வு பேரணியில் சுமார் 80க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி நபர்கள் கலந்துகொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், எனது ஓட்டு எனது பெருமை ( 19) என்ற விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து 100 சதவீதம் நேர்மையாக வாக்களிப்பது குறித்த வாக்காளர் உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது. மேலும், வாக்காளர்களிடையே 100 சதவீத வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் பருவம், தேசத்தின் பெருமிதம் என்ற மாற்றுத்திறனாளிகளுக்கான கையெழுத்து இயக்க வாகனத்தில் மாற்றுத்திறனாளிகள் கையெழுத்திட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ரவிச்சந்திரன், அரசு அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# 100 சதவீதம் வாக்குப்பதிவு மற்றும் நேர்மையாக வாக்களித்தல் ஆகியவற்றை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு சிலம்பாட்டம் - பேரணி



தென்காசி, ஏப். 14

தென்காசி மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவு மற்றும் நேர்மையாக வாக்களித்தல் ஆகியவற்றை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு சிலம்பாட்டம் பேரணி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ஏ.கே. கமல் கிஷோர் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திருந்து அரசு தொழில் பயிற்சி நிலையம் வரை நடைபெற்றது.

மகளிர் திட்ட இயக்குநர் இரா.மதி இந்திரா ப்ரியதர்ஷினி மற்றும் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் ஜெயரத்தினராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த சிலம்பாட்டப் பேரணியில் 210 சிலம்பாட்டக் கலைஞர்கள் கலந்து கொண்டனர். தென்காசியில் உள்ள அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் வைத்து 210 சிலம்பாட்டக் கலைஞர்களும் பல்வேறு வகையான சிலம்பாட்டக் கலைகளை நிகழ்த்திக் காட்டினர். சிலம்பாட்டப் பேரணியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து அரசு தொழில் பயிற்சி நிலையம் செல்லும் வரையில் பொது மக்கள் சிலம்பாட்ட தேர்தல் விழிப்புணர்வு பேரணியை ஆர்வமுடன் பார்த்தனர். தேர்தல் விழிப்புணர்வு சிலம்பாட்டப் பேரணியில் பங்குபெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அலுவலர்கள், மகளிர் திட்ட அலுவலர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் ஏ.ஆ.சிவக்குமார், டேவிட் ஜெயசிங், ஆ.மாரீஸ்வரன், நு.சாமத்துரை, ஆ.கலைச்செல்வி, யு.பிரபாகர், மகளிர் திட்ட அலுவலர்கள் ஜெயலட்சுமி, து.பொன்கனிலன், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு அலுவலக பணியாளர்கள், வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், விளையாட்டுத் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பாராளுமன்ற பொதுத் தேர்தல்2024ஐ முன்னிட்டு, மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் சிறப்பு வாக்குப் பதிவு மையம்



தர்மபுரி, ஏப். 14

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024ஐ முன்னிட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிறப்பு வாக்குப் பதிவு மையத்தில் தருமபுரி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட தேர்தல் பணியில் ஈடுபடும் பிற பாராளுமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளபதிவுள்ள அலுவலர்கள் தபால் வாக்கு செலுத்தியதை மாவட்ட வருவாய் அலுவலர் செ. பால்பிரின்ஸ்லி ராஜ்குமார் பார்வையிட்டார். தமிழ்நாட்டில் பாராளுமன்ற பொதுத் தேர்தல் முதல் மற்றும் ஒரே கட்டமாக ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை ஜூன் மாதம் 4 ஆம் தேதி நடைபெற உள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணையின்படி, எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024ஐ முன்னிட்டு தருமபுரி பாராளுமன்ற தொகுதி தேர்தல் பணியில் ஈடுபடும் பிற பாராளுமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள பதிவுள்ள அலுவலர்கள் தபால் வாக்களிக்க ஏதுவாக தருமபுரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிறப்பு வாக்குப் பதிவு மையம் அமைக்கப்பட்டுள்ளது. தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களும் (வாக்குச்சாவடி அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், நுண்பார்வையாளர்கள் நீங்கலாக) மற்றும் 15.04.2024 அன்று காலை 09.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை காவல் துறை அலுவலர்கள், நுண் பார்வையாளர்களும் ( ) மேலும் 13.04.2024 அன்று வாக்களிக்க இயலாதவர்களும் சிறப்பு வாக்குப்பதிவு மையத்தில் தபால் வாக்குகள் செலுத்தலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சிறப்பு வாக்குப் பதிவு மையத்தில் வாக்குப்பதிவு நிகழ்வுகளை தருமபுரி பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள்/அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் பார்வையிட்டார்கள்.

இந்த நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பிரகாசம், தனி வட்டாட்சியர் (தேர்தல்) வெங்கடேசன், தேர்தல் அலுவலர்கள், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குபதிவு அலுவலர்களுக்கு நடைபெற்ற 2ம் கட்ட மறு பயிற்சி



கரூர், ஏப். 14

கரூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் தங்கவேல் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி கரூர், நாடாளுமன்ற பொதுத்தேர்தல் வருகின்ற (19.04.2024) அன்று நடைபெறவுள்ளது. வாக்குப்பதிவு பணியில் ஈடுபடவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட கணினி முறை சுழற்சியில் பணி ஒதுக்கீடு கடந்த 20.03.2024 அன்றும், இரண்டாம் கட்ட கணினி முறை சுழற்சியில் 01.04.2024 அன்றும் நடைபெற்றது.

அதனடிப்படையில் தேர்தல் பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு இரண்டாம் கட்ட மறு பயிற்சி வகுப்பு சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களால் இன்று அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்றது. அதில் கரூர் சட்டமன்றத்தொகு திக்குட்பட்ட 1313 வாக்குச் சாவடி அலுவலர்களுக்கு தாந்தோணி அரசு கலைக்கல்லூரியிலும், அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகு திக்குட்பட்ட 1105 வாக்குச்சா வடி அலுவலர் களுக்கு பள்ளபட்டி மேல் நிலைப்பள்ளியிலும், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத்தொகுதி 1441 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு அரசு நிதியுதவி பெறும் புலியூர் இராணி மெய்யம்மை மேல்நிலைப்பள்ளி மற்றும் செட்டிநாடு இராணி மெய்யம்மை மெட்ரிக் பள்ளியிலும், வேடசந்தூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட 1713 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வேடசந்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 1200 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு திண்டுக்கல் மாவட்டம் பணம்பட்டி குமரன்பாலிடெக்னிக் கல்லூரியிலும், மணப்பாறை லெட்சுமிமெட்ரிக் பள்ளி மற்றும்சௌமா பப்ளிக் பள்ளியில் மணப்பாறைசட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட 2301 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கும் என மொத்தம் 9073 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு இரண்டாம் கட்டமாக மறு பயிற்சி வகுப்புகள் நடைபெறுகிறது.

வாக்குச்சாவடி அலுவலர்கள் வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்காளர் வாக்குப்பதிவு தணிக்கை இயந்திரம் உள்ளிட்ட இயந்திரங்களை எவ்வாறு கையாளுவது, மாதிரி வாக்கு பதிவு வாக்கு பதிவுக்கு முன்னதாக நடத்தி முடிப்பது என்பதை இந்த மறு பயிற்சி வகுப்பின் மூலம் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். பயிற்சி பெற்று வரும் அலுவலர்கள் அனைவரும் தபால் வாக்குகள் அளிக்கும் வகையில் சிறப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை அனைவரும் முழுமையாக பயன்படுத்தி தங்களது வாக்குகளை செலுத்த வேண்டுமென மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்

# காவல்துறை பணியாளர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான அஞ்சல் வாக்களிப்பு மையம்



ஈரோடு, ஏப். 14

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூடுதல் கட்டிடம் முதல் தளம் கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல், 2024ஐ முன்னிட்டு தேர்தல் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட உள்ள காவல்துறை பணியாளர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான அஞ்சல் வாக்களிப்பு மையத்தில் வாக்குகள் செலுத்துவதை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்தில் இதுவரை ரூ.5.19 கோடி மதிப்பில் பணமாகவும், பொருட்களாகவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில் உரிய ஆவணங்கள் செலுத்தியதின் அடிப்படையில், ரூ.2.66 கோடி மதிப்பிலான பொருட்கள் மற்றும் தொகை திரும்ப வழங்கப்பட்டுள்ளது. மீதம் ரூ.2.53 கோடி மதிப்பிலான பொருட்கள் மற்றும் தொகை பறிமுதலில் உள்ளது. மாவட்ட ஆட்சியரகத்தில் செயல்படும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் கட்டணமில்லா தொலைபேசி எண் மூலமாக 68 புகார்களும், ஊஏபைடை மூலம் 44 புகார்களும் என 112 புகார்கள் வரப்பெற்றுள்ளது. இப்புகார்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே 50 சதவீதம் அதாவது, 1125 வாக்குச்சாவடிகளில் றுநடிஉயளவபெ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது வழங்கப்பட்ட அறிவுரையின்படி, 65 சதவீதம் அதாவது, 1476 வாக்குச்சாவடிகளில் நடைபெறும். மேலும் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் மத்திய ஆயுத படையில் இருப்பார்கள். 2198 வாக்காளர் தங்கள் அளித்த வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்களும் (ஏஏயுவு) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாக்குச்சாவடி மையங்களில் மின் விளக்குகள், கழிவறை வசதி, குடிநீர், சாய்வு தளம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து, இப்பணிகள் நடைபெறும். தேர்தல் நாளுக்கான அனைத்து பணிகளும் விரைவில் முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தெரிவித்தார்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரியில் எதிர்வரும் பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024ஐ முன்னிட்டு பாராளுமன்ற தொகுதிக்கு பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர், கலெக்டர் அருணா நேரில் பார்வையிட்டார்.

# இராணிப்பேட்டை நகராட்சி முத்துக்கடை பேருந்து நிறுத்தத்தில் தேர்தல் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி




இராணிப்பேட்டை, ஏப்.14

இராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ச.வளர்மதி தலைமையில் இராணிப்பேட்டை நகராட்சி முத்துக்கடை பேருந்து நிறுத்தத்தில் புதிய தலைமுறை தொலைக்காட்சியின் சார்பில் நாடாளுமன்ற பொதத் தேர்தல் 2024 குறித்து நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தேர்தல் விழிப்புணர்வு உறுதிமொழியினை மகளிர் குழுவினர், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது.

தமிழ்நாட்டில் ஏப்ரல் 19ஆம் தேதி ஒரே கட்டமாக நாடாளுமன்ற பொது தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அன்றைய தினம் நமது இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அரக்கோணம் பாராளுமன்ற தொகுதிக்கான பொதுத் தேர்தலில் 18 வயது நிரம்பிய அனைவரும் கட்டாயம் தவறாமல் வாக்களிக்க வேண்டும். உங்கள் ஒவ்வொருவரின் ஓட்டும் விலைமதிப்பில்லாதது. வாக்காளர்கள் ஓட்டை பணத்திற்காகவோ பரிசு பொருளிற்காகவோ விட்டுக் கொடுக்காமல் மனசாட்சியுடன் அனைவரும் வாக்களிக்க வேண்டும். இது குறித்து உங்கள் அக்கம் பக்கத்தினரிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர், மூத்த வாக்காளர்களையும், இளம் தலைமுறை வாக்காளர்களையும், திருநங்கை வாக்காளர்களையும் சால்வை அணிவித்து கௌரவித்தார்கள். தொடர்ந்து, தேர்தல் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து பேரணியில் நடந்துச் சென்றார்கள். இப்பேரணியானது நவல்பூர் வரை சென்றது. இப்பேரணியில் 300க்கும் மேற்பட்ட மகளிர் குழுவினர், அங்கன்வாடி பணியாளர்கள், பொதுமக்கள் பொதுமக்களிடையே தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தியவாறே நடந்து சென்றனர்.

# காவல் துறையினர் தபால் வாக்கு செலுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு வாக்குச்சாவடி மையம்

கரூர், ஏப். 14

கரூர் மாவட்டத்தில் காவல் துறையினர் தபால் வாக்கு செலுத்தும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு வாக்குச் சாவடி மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.



கரூர் மக்களவைப் பொதுதேர்தலையொட்டி, வருகின்ற 19.04.2024, வெள்ளிக்கிழமை வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. கரூர் மாவட்டத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள காவல் துறையினர் தங்களது தபால் வாக்கினை இன்று 13.04.2024 காலை 7 மணி முதல் மாலை 6 வரை செலுத்தும் வகையில் சிறப்பு வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், கரூர் மாவட்ட காவல் துறையில் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 1,285 காவல் துறையினர் கரூர், மாவட்ட ஆட்சியரகத்தில் தபால் வாக்கு செலுத்தும் வகையில் சிறப்பு வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தபால் வாக்குப்பதிவு நடைபெறும் பணிகளை வேட்பாளர்கள் அல்லது வேட்பாளர்களின் பிரதிநிதிகள் பார்வையிடும் வகையிலும், வாக்குப்பதிவு நடைமுறைகளை வீடியோ ஒளிப்பதிவு செய்திடவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆய்வின்போது. மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) சையது காதர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடு

திண்டுக்கல், ஏப். 14

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024ஐ முன்னிட்டு, திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதிக்கு வாக்கு எண்ணிக்கை மையம் அமைக்கப்பட்டுள்ள திண்டுக்கல் முத்தனம்பட்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



இந்த ஆய்வின்போது, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, தெரிவித்ததாவது:

திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை மையம் திண்டுக்கல் முத்தனம்பட்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டு வருகிறது. வாக்குப்பதிவு முடிந்த பின்னர் வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பதற்கான பாதுகாப்பு அறை மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ள அறைகள் ஆகியவை சட்டமன்ற தொகுதி வாரியாக தனித்தனியாக அமைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, தரைத்தளத்தில், திண்டுக்கல் மற்றும் பழனி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கும், முதல் தளத்தில் நத்தம் மற்றும் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிகளுக்கும், இரண்டாம் தளத்தில் ஒட்டன்சத்திரம் மற்றும் நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதிகளுக்கும் தனித் தனியாக வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறை மற்றும் வாக்கு எண்ணிக்கை அறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தலில் வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை, வாக்குப் பதிவு முடிந்த பின்னர் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு கொண்டு வந்து பாதுகாப்பாக வைப்பதற்கான அறைகள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப் பாட்டு இயந்திரங்கள், வாக்குப்பதிவு உறுதி செய்யும் இயந்திரங்கள் ஆகியவற்றை முதல்தளம், 2வது தளம் மற்றும் பாதுகாப்பு அறைகளுக்கு எவ்வித சிரமம் இன்றி எளிதாக கொண்டு செல்வதற்கான வழிப்பாதைகள், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் அறைகள், கட்டுப்பாட்டு அறைகள், செய்தியாளர் அறைகள், பார்வையாளர்கள் அறைகள் என பல்வேறு அறைகள் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, தனித்தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அமைக்கப்பட்டு வருகின்றன. வாக்கு எண்ணிக்கையின்போது, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பு அறையிலிருந்து, வாக்கு எண்ணிக்கை நடைபெறும் அறைக்கு எடுத்துச் செல்வதற்கு தனிப்பாதை வசதி, முகவர்கள் செல்வதற்கு தனிப்பாதை வசதி, தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தனித்தனி அறைகள் அமைக்கப்படுகின்றன. வெளிப்பகுதியில் கண்காணிப்பு கோபுரம் அமைக்கப்படுகிறது. அனைத்துப் பணிகளையும் 15.04.2024ஆம் தேதிக்குள் முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

# பாராளுமன்ற தேர்தலையோட்டி தேர்தல் பணியில் ஈடுபடும் காவல்துறையினர் மற்றும் தேர்தல் நுண்பார்வையாளர்கள் தபால் வாக்கு செலுத்துவதை கலெக்டர் பார்வை

மயிலாடுதுறை, ஏப். 14

மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதியில் சீர்காழி சட்டமன்ற தொகுதியில் 288 வாக்கு சாவடிகளும், மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில் 266 வாக்குசாவடிகளும், பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் 306 வாக்குசாவடிகளும், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் 293 வாக்குசாவடிகளும், கும்பகோணம் சட்டமன்ற தொகுதியில் 289 வாக்கு சாவடிகளும், பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் 301 வாக்குசாவடிகளும் ஆக மொத்தம் 1743 வாக்குசாவடிகள் உள்ளன.



மயிலாடுதுறை மாவட்டத்தில் தேர்தலை எதிர்கொள்ள ஏதுவாக வாக்குப் பதிவு அலுவலர்கள் 4213 ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் பணியில் ஈடுப்படுத்தப்பட உள்ளனர். சட்டம் ஒழுங்கு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக மாவட்டத்தில் 85 மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர், பாபநாசம்,கும்பகோணம், ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தேர்தலை எதிர்கொள்ள ஏதுவாக வாக்குப்பதிவு அலுவலர்கள் 4346 ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் பணியில் ஈடுப் படுத்தப்பட உள்ளனர். இத்தேர்தல் பணியில் மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளிலும் 1453காவலர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் தேர்தல் பணியில் ஈடுபடும் பிற மாவட்டங்களை சேர்ந்த அலுவலர்களுக்கு தபால் வாக்கு செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. காவல் துறையினர் மற்றும் நுண்பார்வையாளர்கள் தபால் வாக்கு செலுத்தும் வசதி அமைக்கப் பட்டுள்ளது. என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) செல்வம், துணை காவல்கண்காணிப்பாளர் கணேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துவடிவேல், தனிவட்டாட்சியர் (தேர்தல்) விஜயராகவன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

# கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் வாக்குரிமை பெற்ற அரசு ஊழியர்களுக்கான தபால் வாக்கு பதிவுகள்

கன்னியாகுமரி, ஏப். 14

கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் பி.என்.ஸ்ரீதர், விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மார்த்தாண்டம் சேக்ரட் ஹார்ட் மெட்ரிகுலேஷன் பள்ளி மற்றும் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட நாகர்கோவில் புனித ஜோசப் மெட்ரிகுலேஷன் பள்ளி ஆகியவற்றில், வெளிமாவட்டங்களில் வாக்குரிமை பெற்று கன்னியாகுமரி மாவட்டத்தில் பணிபுரிகின்ற அரசு ஊழியர்கள் மற்றும் விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் வாக்குரிமை பெற்றுள்ள அரசு ஊழியர்கள் ஆகியோர் தபால் வாக்கு பதிவு செய்வதினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்



கன்னியாகுமரி பாராளுமன்ற தொகுதி பொதுத்தேர்தல் மற்றும் விளவங்கோடு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள அரசு ஊழியர்களுக்கு மற்றும் 14.04.2024 ஆகிய தேதிகளில் 229, கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்கான வசதி மையம் புனித ஜோசப் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, ஆசாரிபள்ளம், நாகர்கோவிலிலும், 230, நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்கான வசதி மையம் அல்போன்சா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, யு.சு. கேம்ப் ரோடு, நாகர்கோவிலிலும், 231, குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கான வசதி மையம் புனித சேவியர் பொறியியல் கல்லூரி சுங்கான்கடையிலும், 232, பத்மனாபபுரம் சட்டமன்ற தொகுதிக்கான வசதி மையம் எக்ஸல் சென்ட்ரல் பள்ளி, திருவட்டாரிலும், 233, விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கான வசதி மையம் சேக்ரட் ஹார்ட் இன்டர்நேஷனல் பள்ளி பம்மம், மார்த்தாண்டத்திலும், 234, கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்கான வசதி மையம் பெத்லகேம் பொறியியல் கல்லூரி, கருங்கலிலும் தங்களது வாக்கினை செலுத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு இன்று தபால் வாக்குப் பதிவுகள் நடைபெற்று வருகிறது. முன்னதாக கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் பி.என்.ஸ்ரீதர், விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மார்த்தாண்டம் சேக்ரட் ஹார்ட் மெட்ரிகுலேஷன் பள்ளி மற்றும் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாகர்கோவில் புனிதஜோசப் மெட்ரிகுலேஷன் பள்ளி ஆகியவற்றில், வெளிமாவட்டங்களில் வாக்குரிமை பெற்று கன்னியாகுமரி மாவட்டத்தில் பணிபுரிகின்ற அரசு ஊழியர்கள் மற்றும் விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் வாக்குரிமை பெற்றுள்ள அரசு ஊழியர்கள் ஆகியோருக்கு தபால் ஓட்டு பதிவு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள வசதி மையத்தில் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

# திருவாரூரில் வாக்குசாவடி மையத்தில் பணிபுரியவுள்ள வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான 3ம் கட்ட பயிற்சி



திருவாரூர், ஏப்.14

திருவாரூர் மாவட்டத்திலுள்ள வாக்குசாவடி மையத்தில் பணிபுரியவுள்ள வாக்குப் பதிவு அலுவலர்களுக்கான மூன்றாம் கட்ட பயிற்சி வகுப்பு நடைபெறுவதனை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் தி.சாருஸ்ரீ, பார்வையிட்டார்கள். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் சி.ப்ரியங்கா உடனிருந்தார்.

இந்திய தேர்தல் ஆணையம் பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி, பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் எதிர்வரும் 19.4.2024 ஆகும். வாக்கு எண்ணிக்கை நாள் 04.06.2024 ஆகும்.

திருவாரூர் மாவட்டத்தில் 166.திருத்துறைப் பூண்டி சட்டமன்ற தொகுதி, 167.மன்னார்குடி சட்டமன்ற தொகுதி, 168.திருவாரூர் சட்டமன்ற தொகுதி, 169.நன்னிலம் சட்டமன்ற தொகுதி என நான்கு சட்டமன்ற தொகுதிகள் அடங்கி உள்ளது. திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நன்னிலம், மன்னார்குடி என 4 சட்டமன்ற தொகுதிகளிலும் மொத்தம் 509758 ஆண் வாக்காளர்களும், 535117 பெண் வாக்காளர்களும், 65 மூன்றாம் பாலினத்தவர்களும் உள்ளனர்.

166.திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதிக்கு வாக்குப்பதிவு அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்1, வாக்குப்பதிவு அலுவலர்2, வாக்குப்பதிவு அலுவலர்4 என 1340 அலுவலர்களும், 167.மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்கு வாக்குப்பதிவு அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்1, வாக்குப்பதிவு அலுவலர்2, வாக்குப்பதிவு அலுவலர்4 என 1394 அலுவலர்களும்,

168.திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்கு வாக்குப்பதிவு அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்1, வாக்குப்பதிவு அலுவலர்2, வாக்குப்பதிவு அலுவலர்4 என 1526 அலுவலர்களும், 169.நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்கு வாக்குப்பதிவு அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்1, வாக்குப்பதிவு அலுவலர்2, வாக்குப்பதிவு அலுவலர்4 என 1541 அலுவலர்களும் என மொத்தம் 5801 அலுவலர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம் மஞ்சக்குடி சுவாமி தயானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், திருவாரூர் வட்டம், வேலுடையார் கல்வி நிறுவனத்திலும் வாக்குசாவடி மையத்தில் பணிபுரியவுள்ள வாக்குப் பதிவு அலுவலர்களுக்கான மூன்றாம் கட்ட பயிற்சி வகுப்பு நடைபெறுவதனை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் தி.சாருஸ்ரீ, பார்வையிட்டார்கள்.

# கங்கைகொண்டான் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களிடம் விழிப்புணர்வு

திருநெல்வேலி, ஏப். 14

திருநெல்வேலி மக்களவை பொதுத்தேர்தல் 2024 நடைபெறுவதையொட்டி, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் 100 சதவீதம் வாக்களித்திட வேண்டியதன் அவசியம் குறித்து 18 வயது நிரம்பிய இளம் வாக்காளர்கள், பொதுமக்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களிடையே பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.




குறிப்பாக, வாக்காளர் கல்வியறிவு இயக்கத்தினை சார்ந்த கல்லூரி மாணவ, மாணவியர்கள் கடந்த தேர்தலின்போது வாக்குப் பதிவு குறைவான பகுதிகளிலுள்ள பொதுமக்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்கள். மேலும், வெளியூர்களில் பணிபுரியும் வாக்காளர்களுக்கு வரும் மக்களவை தேர்தலில் வந்து வாக்களித்திட வேண்டுமென அழைப்பு விடுக்கப் பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, திருநெல்வேலி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கங்கை கொண்டான் சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள நோவா கார்பன் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்தில் மானூர் வருவாய் வட்டாட்சியர் முருகன் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பணியாளர்களிடம் எடுத்துரைத்து, நமது வாக்கு நமது உரிமை ஜனநாயக கடமையை அனைவரும் நிறைவேற்ற வேண்டுமென விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியில், அலுவலர்கள், சிப்காட் நிறுவன பணியாளர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

# தஞ்சை மாவட்ட நாயுடு பெரு மக்கள் நல சங்கம் சார்பில் 51ம் ஆண்டு யுகாதி பெருவிழா



தஞ்சாவூர், ஏப்.14

தஞ்சை பெசண்ட் அரங்கில் தஞ்சைமாவட்ட நாயுடு பெருமக்கள் நல சங்க 51ம் ஆண்டு யுகாதி பெருவிழா (தெலுங்கு வருடப்பிறப்பு) மற்றும் மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட நாயுடு பெருமக்கள் நல சங்க தலைவர் சீத்தாராமன் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் ராஜமகேந்திரன், சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் செல்வராஜ் கௌரவ தலைவர்கள் வரதராஜன், விமலா நரசிம்மன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக பூஜை பிரபந்த சேவை நடைபெற்றது.

தொடர்ந்து டாக்டர் தர்மராஜன், கௌரவ தலைவர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் சங்க கொடியை ஏற்றினர்.

பெண்களுக்கான மாபெரும் ரங்கோலி கோலம் போட்டி நடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் கலந்து கண்டு விதவிதமான ரங்கோலி கோலம் வரைந்தனர். இந்த கோலப்போட்டியை சாந்தி சீதாராமன், சாந்தி பத்மநாபன் , லதா கோபி கிருஷ்ணா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

தொடர்ந்து ஜாதக பரிவர்த்தனை நடைபெற்றது. பின்னர் சிறுவர், சிறுமிகள், ஆண்கள், பெண்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது.

மாலையில் பாடகர் வேதையனின் வீணை கச்சேரி, அதைத் தொடர்ந்து 15 வயதுக்குட் பட்டவர்களுக்கு நடனம், பாட்டு போட்டியும்.

பின்னர் 51ம் ஆண்டு மலர் வெளியீட்டு விழா நடந்தது. விழாவிற்கு சங்க மாவட்ட தலைவர் சீத்தாராமன் நாயுடு தலைமை தாங்கினார். மாவட்ட பொதுச்செயலாளர் ஆர்.கே.பாஸ்கரன் நாயுடு வரவேற்றார். விழா மலரை தஞ்சை அரண்மனை பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன்ஸ்லே வெளியிட்டார். முதல் பிரதியை மாவட்ட தலைவர் சீத்தாராமன் பெற்றுக் கொண்டார். விழாவில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு திருச்சி மாநகரத் தலைவர் கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டார்.

இதையடுத்து கோல போட்டி ,விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. 80 வயது பூர்த்தி அடைந்த தம்பதியர்கள் கௌரவப்படுத்தப்பட்டனர்.

மாணவ மாணவிகளுக்கு கல்வி ஊக்க பரிசு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியை துணைத் தலைவர் பத்மநாபன் தொகுத்து வழங்கினார்.

# தேனி மாவட்டத்தில் சமத்துவ நாள் உறுதிமொழி கலெக்டர் தலைமையில் ஏற்பு

தேனி, ஏப். 14

தேனி மாவட்டம், கம்பம் நகராட்சி அலுவலகத்தில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் தேதியினை சமத்துவ நாளாக ஆண்டு தோறும் அனுசரிக்கப்பட்டு வருகிறது, மாவட்ட கலெக்டர் ஆர்.வி.ஷஜீவனா, தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர். சிவபிரசாத், முன்னிலையில் சமத்துவ நாள் உறுதிமொழியினை அனைத்து அலுவலர்களும் ஏற்றுக் கொண்டனர்.

சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும், வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து, எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய, நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்து தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளில், சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும்,




சக மனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும், சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன் என மாவட்ட கலெக்டர் தலைமையில் அனைத்து அலுவலர்களும் உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர்.

## பரத் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்ட விஜய் சேதுபதி



ஷங்கர் இயக்கத்தில் வெளிவந்த பாய்ஸ் திரைப்படம் மூலம் பரத் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமாகினார் . இதை தொடர்ந்து விஷால் நடிப்பில் வெளிவந்த செல்லமே திரைப்படத்தில் வில்லனாக நடித்து இருந்தார்.

பாலாஜி சக்திவேல் இயக்கத்தில் வெளிவந்த காதல் திரைப்படத்தின் மூலம் மக்கள் மனதை வென்றார் பரத். அதற்கடுத்து பட்டியல், எம் மகன், வெயில், வானம், காளிதாஸ், 555 போன்ற பலப் படங்களில் நடித்தார்.

இந்நிலையில் அவர் நடிக்கும் அடுத்த படத்தின் ஃபர்ஸ் லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது. "ஒன்ஸ் அபான் எ டைம் இன் மெட்ராஸ்" என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை அறிமுக இயக்குனரான பிரசாத் முருகன் இயக்கியுள்ளார். படத்தின் படப்பிடிப்பு வேலைகள் முடிந்த நிலையில் தற்பொழுது ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டுள்ளனர். அபிராமி, பவித்ரா லட்சுமி, அஞ்சலி நாயர் ,மற்றும் ஷான் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர்.

எதிர்பாராதவிதமாககிடைக்கும்துப்பாக்கியைவைத்துநான்குகதாப்பாத்திரத்திற்குள் ஒரு ஹைப்பர் லிங்க் கதைக்களத்தோடு உருவாகியுள்ளது இத்திரைப்படம். படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை நடிகர் விஜய் சேதுபதி அவரின் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டார்.

## படே மியான் சோட் மியான் : ஒரே நாளில் ரூ. 15 கோடி வசூல்



பாலிவுட் முன்னணி நடிகர்கள் அக்ஷய் குமார் மற்றும் டைகர் ஷெராப் ஆகியோர் இணைந்து நடித்த இந்தி ஆக்ஷன் படம் 'படே மியான் சோட் மியான்'.இப்படத்தில் கதாநாயகிகளாக சோனாக்ஷி சின்ஹா, மனுஷி சில்லர் ஆகியோர் நடித்தனர்.இயக்குனர் அலி அப்பாஸ் ஜாபர் இந்த படத்தை இயக்கினார்.

படே மியான் சோட் மியான்" படம் மும்பை, லண்டன், அபுதாபி, ஸ்காட்லாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் மனதை கவரும் இடங்களில் படமாக்கப்பட்டது.

இப்படத்தை வாசு பாக்னானி, தீப்ஷிகா தேஷ்முக், அலிஅப்பாஸ் ஜாபர் ஆகியோர் இணைந்து தயாரித்தனர். இந்தபடம் நேற்று ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு 'ரிலீஸ்' செய்யப்பட்டது.

படே மியான் சோட் மியான் படம் வெளிட்ட தியேட்டர்களில் ஹவுஸ்புல் காட்சிகளாக படம் ஓடி வருகிறது. ரசிகர்கள் ஆர்வமுடன் படத்தை பார்த்து வருகின்றனர்.

மேலும் இப்படம் பாக்ஸ் ஆபீஸ் வசூல் சாதனையை தொடங்கி உள்ளது. நேற்று ஒரு நாள் மட்டும் இந்தியா முழுவதும் ரூ.15.62 கோடி வசூல் சாதனை பெற்றுள்ளது. இதையொட்டி படக்குழுவினர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## பிரதீப் அஸ்வத் காம்போவை வாழ்த்திய சிம்பு



இயக்குநர் பிரதீப் ரங்கநாதன் அடுத்ததாக நடிக்க இருக்கும் படத்தின் அறிமுக வீடியோ நேற்று வெளியிடப்பட்டது. ஓ மை கடவுளே படத்தை இயக்கிய அஸ்வத் மாரிமுத்து இந்த படத்தை இயக்க இருக்கிறார்.

கலகலப்பான காட்சிகள் நிறைந்த புதிய படத்தின் அறிமுக வீடியோ, அஸ்வத் மற்றும் பிரதீப் இடையில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற உண்மை கதையை தழுவி உருவாக்கப்பட்டு இருந்தது. இந்த வீடியோவை பார்த்த நடிகர் சிம்பு, இயக்குநர் அஸ்வத் மாரிமுத்துவுக்கு வாழ்த்து தெரிவித்து இருக்கிறார்.

இது தொடர்பாக இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "சிம்பு ரசிகர்களுக்கு வணக்கம். புதிய படத்தின் அறிமுக வீடியோவை பார்த்துவிட்டு தனக்கே உரித்தான ஸ்டைலில் எனக்கு முதலில் வாழ்த்து தெரிவித்தது எஸ்.டி.ஆர். தான். ஓ மை கடவுளே பார்த்துவிட்டு எனக்கு முதலில் வாழ்த்து தெரிவித்ததும் அவர்தான்."

"நான் அவருக்கு சொன்ன கதை முற்றிலும் வேறானது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அவர் அந்த கதைக்கு தயார் என்றால், அதனை துவங்கிவிடலாம்," என்று குறிப்பிட்டுள்ளார்.

## ராஜமௌலி இயக்கத்தில் டேவிட் வார்னர் வைரலாகும் வீடியோ



பாகுபலி மற்றும் ஆர் ஆர் ஆர் போன்ற மிகப்பெரிய படங்களை இயக்கியவர் ராஜமௌலி. ஆர் ஆர் ஆர் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அடுத்ததாக அவரின் 29 ஆவது படத்தின் வேலைகளில் ஈடுப்பட்டு வருகிறார்.

ராஜமௌலி தற்பொழுது ஆஸ்திரேலியா கிரிக்கெட் வீரரான டேவிட் வார்னருடன் விளம்பர படத்தில் இணைந்து நடித்துள்ளார்.

அதில் டேவிட் வார்னரிடம் அவர் விளையாடும் மேட்சைப் பார்க்க டிக்கெட் டிஸ்கவுண்ட் கேட்கிறார். அதற்கு அவர் கிரெட் ஆப் இருந்தால் கிடைக்கும் என கூறுகிறார். அதற்கு ராஜமௌலி அது இல்லை என்றால் என்ன செய்வது என கேட்கிறார். அதற்கு டேவிட் வார்னர் அவருக்கு ஒரு உதவி செய்யுமாறு கேட்கிறார். அதற்கு பிறகுள்ள காட்சிகள் மிக நகைச்சுவையாக காட்சி படுத்தப்பட்டுள்ளது. டேவிட் வார்ன்ர் நம் இந்திய சினிமாவில் நடித்து இருந்தால் எப்படி இருக்கும் என காட்சி படுத்துயுள்ளனர். இந்த விளம்பர படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## 'குண்டு மல்லி ரெண்டு ரூபாய்' பாடலுக்கு மனைவியுடன் நடனமாடிய ராஜமௌலி



இந்திய சினிமாவை அடுத்தக்கட்டதிற்கு எடுத்துச் சென்ற பெருமை இயக்குனர் ராஜமௌலிக்கு உண்டு. எபிக், ஆக்ஷன் மற்றும் ஃபேண்டசி கதைக்களத்தில் படம் இயக்குவதில் திறம்பெற்றவர் ராஜமௌலி. 2009 ஆம் ஆண்டு வெளியான 'மாவீரன்' அதைத் தொடர்ந்து 'நான் ஈ' படத்தை இயக்கினார்.

'பாகுபலி' மற்றும் 'ஆர் ஆர் ஆர்' திரைப்படம் இவருக்கு மிகப் பெரிய வெற்றியை பெற்றுக் கொடுத்தது. இந்நிலையில் ராஜமௌலி அவரின் மனைவி ரமாவுடன் நடனமாடும் வீடியோ இணையதளத்தில் வெளியாகியுள்ளது.

அதில் தெலுங்கு பாடலான 'அந்தமைன்னா பிரேமரனி' பாட்டிற்கு நடனமாடியுள்ளனர். அவர்களின் குடும்ப திருமண நிகழ்ச்சியில் நடனமாடுவதற்கு பயிற்சி செய்த வீடியோவாகும் இது. ராஜமௌலி இதில் குழந்தைப் போன்று முக பாவனைக் கொடுத்து மிக அழகாக ஆடியுள்ளார்.

## சல்மான்கான் வீட்டுக்கு சென்ற ரன்பீர் கபூர் ஆலியா பட்



பிரபல நடிகர் ரன்பீர்கபூர் ஆலியாபட் தம்பதியினர் மும்பையின் பாந்த்ராவில் உள்ள கேலக்ஸி அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள சல்மான்கான் வீட்டிற்கு ரம்ஜான் விருந்துக்கு சென்றுள்ளனர்.

இதில் ஆலியா குறைந்த மேக்கப்புடன் முழு வெள்ளை நிற சல்வார் உடையணிந்துள்ளார். அதே போல ரன்பீர் ஜீன்ஸ் பேண்ட் சாம்பல் நிற டிஷர்ட் மேல் நீல நிற டெனிம் சட்டையுடன் சாதாரண தோற்றத்துடன் உடை அணிந்துள்ளார்.

சல்மான் மற்றும் ரன்பீர் இருவரும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கத்ரீனாகைப் உடன் டேட்டிங் செய்தனர். ஆனால் சல்மான்கான் விக்கி கவுஷலை மணந்தார். ரன்பீர் ஆலியாபட்டை 2022ல் திருமணம் செய்து கொண்டார், ரன்பீருக்கு ராஹா என்ற மகள் உள்ளார். கடந்த பல வருடங்களாக ரன்பீரும் சல்மானும் பேசிக்கொள்ள வில்லை.

இந்நிலையில் தற்போது ரம்ஜான் பண்டிகைக்கு எதிர்பாராத சல்மான்கான் வீட்டிற்கு ரன்பீர் ஆலியாபட் விருந்துக்கு சென்றது ரசிகர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து இணைய தளத்தில் ரசிகர்கள் பலவித விமர்சனம் செய்து பதிவிட்டு வருகின்றனர்.

தற்போது அலியா பட் ஜிக்ரா மற்றும் லவ் & வார் ஆகிய படங்களில் நடிக்கிறார் . அவரது கணவர் ரன்பீர் கபூர் தற்போது நித்தேஷ் திவாரியின் ராமாயண படப்பிடிப்பில் பிஸியாக உள்ளார்.

அதே போல் சல்மான்கான் கடைசியாக கத்ரீனா கைப் ஜோடியாக டைகர் 3 ல் நடித்தார். சல்மான் தற்போது அடுத்த புதிய படம் குறித்து ரம்ஜான் தினத்தில் அறிவிப்பு வெளியிட்டு இருந்தார். தமிழ் பட இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் 'சிக்கந்தர்' படத்தில் நடிக்க உள்ளார்.

## ஐபிஎல் தொடர்: 27வது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் ராஜஸ்தான் அணிகள் மோதல்




17வது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இன்று (சனிக்கிழமை) முல்லாப்பூரில் நடைபெறும் 27வது லீக் ஆட்டத்தில் தவான் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் சஞ்சு சாம்சன் தலைமையலான ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதுகின்றன.

பஞ்சாப் அணி விளையாடிய 5 ஆட்டங்களில் 2ல் வெற்றி பெற்று புள்ளி பட்டியலில் 8வது இடத்தில் உள்ளது.

ராஜஸ்தான் அணி விளையாடிய 5 ஆட்டங்களில் 4ல் வெற்றி பெற்று புள்ளி பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

இரு அணிகளும் இதுவரை 26 முறை நேருக்கு நேர் மோதி இருக்கின்றன. இதில் ராஜஸ்தான் 15 ஆட்டங்களிலும், பஞ்சாப் 11 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இருக்கின்றன.

## ஐபிஎல் 2024 – ஜேக் ஃப்ரேசர், ரிஷப் பந்த் மிரட்டல்.. 6 விக்கெட் வித்தியாசத்தில் டெல்லி வெற்றி




ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரின் 26 ஆவது லீக் போட்டியில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் மற்றும் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகள் இன்று பலப்பரீட்சை நடத்துகின்றன. லக்னோவில் நடைபெறும் இந்த போட்டியில் டாஸ் வென்ற லக்னோ அணி பேட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி பேட்டிங்கை தொடங்கிய லக்னோ அணிக்கு துவக்க வீரர்களாக களமிறங்கிய குவிண்டன் டி காக் மற்றும் கேப்டன் கே.எல். ராகுல் முறையே 19 மற்றும் 39 ரன்களை குவித்து ஆட்டமிழந்தனர். அடுத்து களமிறங்கிய தேவ்தத் படிக்கல் 3 ரன்களிலும், மார்கஸ் ஸ்டாயினிஸ் 8 ரன்களிலும் ஆட்டமிழந்தனர்.

அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்த லக்னோ அணி 20 ஓவர்கள் முடிவில் 167 ரன்களை குவித்தது. லக்னோ அணி சார்பில் ஆயுஷ் பதோனி சிறப்பாக ஆடி 34 பந்துகளில் 55 ரன்களை குவித்தார். டெல்லி சார்பில் சிறப்பாக பந்துவீசிய குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுகளையும், கலீல் அகமது 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இஷாந்த் சர்மா, முகேஷ் குமார் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

எளிய இலக்கை துரத்திய டெல்லி அணிக்கு பிரித்வி ஷா நல்ல துவக்கம் கொடுத்தார். 22 பந்துகளில் 32 ரன்களை குவித்த பிரித்வி ஷா ஆட்டமிழந்தார். இவருடன் களமிறங்கிய டேவிட் வார்னர் 8 ரன்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஜேக் ஃபிரேசர் சிறப்பாக ஆடி அரைசதம் அடித்தார். 35 பந்துகளில் 55 ரன்களை விளாசிய ஜேக் ஃபிரேசர் நவீன் உல் ஹக் பந்தில் ஆட்டமிழந்தார். இவருடன் ஆடிய கேப்டன் ரிஷப் பந்த் 24 பந்துகளில் 41 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார்.

18.1 ஓவர்கள் முடிவில் டெல்லி அணி 4 விக்கெட்டுகளை இழந்து 170 ரன்களை குவித்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 2024 ஐ.பி.எல். தொடரில் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி தனது இரண்டாவது வெற்றியை பதிவு செய்தது.

லக்னோ சார்பில் ரவி பிஷ்னோய் 2 விக்கெட்டுகளையும், யாஷ் தாக்கூர் மற்றும் நவீன் உல் ஹக் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

## என்னை ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கவைக்க சதி: மல்யுத்த வீராங்கனை குற்றச்சாட்டு



இந்திய முன்னாள் மல்யுத்த சம்மேளன தலைவரும், பா.ஜனதா எம்.பி.யுமான பிரிஜ் பூஷன் சரண் சிங் இளம் மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்து அச்சுறுத்துவதாகவும், அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் இந்திய மல்யுத்த நட்சத்திரங்கள் பஜ்ரங் பூனியா, வினேஷ் போகத், சாக்ஷி மாலிக் உள்ளிட்டோர் மாதக்கணக்கில் போராட்டம் நடத்தினர். இதைத் தொடர்ந்து பிரிஜ் பூஷன் மீது டெல்லி போலீசார் வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். அவர் பொறுப்பில் இருந்தும் ஒதுங்கினார்.

மல்யுத்த சம்மேளனத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தலில் தலைவராக சஞ்சய் சிங் தேர்வு செய்யப்பட்டார். பிரிஜ் பூஷனின் கூட்டாளியான இவருக்கும் சில வீரர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு நிலவுகிறது.

இந்த நிலையில் முன்னணி மல்யுத்த வீராங்கனை 29 வயதான வினேஷ் போகத், தன்னை ஊக்கமருந்து வலையில் சிக்கவைக்க சதி நடப்பதாக பரபரப்பான புகார் கூறியுள்ளார். வினேஷ் போகத், உலக சாம்பியன்ஷிப்பில் வெண்கலப்பதக்கம் வென்றவர். ஆசிய விளையாட்டு மற்றும் காமன்வெல்த் விளையாட்டிலும் சாம்பியன். 50 கிலோ எடைப்பிரிவில் ஒலிம்பிக் இடத்தை உறுதி செய்யும் இலக்குடன் அடுத்த வாரம் கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கேக் நகரில் நடைபெறும் ஆசிய ஒலிம்பிக் தகுதி சுற்றில் பங்கேற்க உள்ளார்.

வினேஷ் போகத் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'பிரிஜ் பூஷனும், அவரது விசுவாசியான சஞ்சய் சிங்கும் இணைந்து நான் ஒலிம்பிக்கில் பங்கேற்பதை தடுக்க எல்லா வழியிலும் முயற்சிக்கிறார்கள். அணியில் நியமிக்கப்பட்டுள்ள எல்லா பயிற்சியாளர்களும் அவர்களது ஆதரவாளர்கள். எனவே எனக்குரிய போட்டியின்போது அவர்கள் நான் குடிக்கும் தண்ணீரில் ஏதாவது கலந்து கொடுக்க வாய்ப்புள்ளது. என் மீது ஊக்கமருந்து மோசடி பேர்வழி என்ற முத்திரை குத்துவதற்கு சதிவேலை நடக்கிறது.

கடந்த ஒரு மாத காலமாக எனது பயிற்சியாளர் மற்றும் பிசியோவுக்கு அங்கீகார அட்டை வழங்கும்படி இந்திய விளையாட்டு ஆணையத்திடம் (சாய்) முறையிட்டு வருகிறேன். அங்கீகார அட்டை இல்லாவிட்டால் அவர்களால் என்னுடன் போட்டி நடக்கும் இடத்திற்கு வர முடியாது. பல முறை கேட்டும் அவர்களிடம் இருந்து எனக்கு முறையான பதில் வரவில்லை. உதவி செய்வதற்கு யாரும் தயாராக இல்லை.

விளையாட்டு வீரர்களின் வாழ்க்கையில் இப்படி தான் விளையாடுவதா?

போட்டிக்கு முன்பாக எங்களை மனரீதியாக துன்புறுத்துகிறார்கள். தவறுக்கு எதிராக குரல் கொடுத்தால் நம் நாட்டில் இதுதான் தண்டனையா? தேசத்துக்காக விளையாட செல்லும் முன்பு எங்களுக்கு நீதி கிடைக்கும் என்று நம்புகிறேன்' என்றார்.

இதற்கிடையே வினேஷ் போகத்தின் குற்றச்சாட்டை இந்திய மல்யுத்த சம்மேளனம் மறுத்துள்ளது. பெயர் வெளியிட விரும்பாத மல்யுத்த சம்மேளன அதிகாரி ஒருவர் கூறுகையில், 'தனது தனிப்பட்ட பயிற்சியாளர் மற்றும் பிசியோவுக்கு அங்கீகார அனுமதி அட்டை கேட்டு கடந்த மார்ச் 18ந்தேதி வினேஷ் போகத் இமெயில் அனுப்பினார். ஆனால் அதற்கு முன்பாகவே (மார்ச் 11) உலக மல்யுத்த சம்மேளனத்திற்கு அனுப்புவதற்கான காலக்கெடு முடிந்து விட்டது.

அவர் தாமதமாக விண்ணப்பித்ததால் எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏற்கனவே 9 பயிற்சியாளர்கள் அணியினருடன் செல்லும் நிலையில் கூடுதல் பயிற்சியாளர் தேவையா?, வினேஷ் போகத் தனிப்பட்ட பயிற்சியாளர் வேண்டும் என்று நினைத்தால், உலக மல்யுத்த சம்மேளனத்தை அணுகி முயற்சித்து பார்க்கலாம். அதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை' என்றார்.



**நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது**

**விளக்கம்:**

**தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வை விட மிகவும் பெரிதாகும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.